***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT Mannargudi***
***CC.No.99/2019 – P.W.1 (LW1)***

| | |
|---|---|
| *Name* | வீரசேகரன் |
| *Father/Husband's Name* | கல்யாணசுந்தரம் |
| *Village* | மேலநத்தம் |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *41* |

*1 வது* **எதிரி ஆஜர். 2 வது எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 26.06.2025.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். வெளிநாட்டில் Quality control Inspector ஆக வேலை செய்து வருகிறேன்.

நான் 2018 ம் வருடம் தற்காலிகமாக முல்லை நகரில் குடியிருந்து வருகிறேன். கடந்த 10.11.2018 ம் தேதியன்று இரவு 10.00 மணியளவில் வெளியில் சென்று விட்டு தனது இருச்சக்கர வாகனமான Bajaj pulsar நிறுத்திவிட்டு சென்றுவிட்டேன் அரைமணிநேரம் கழித்து வெளியில் நிறுத்தியிருந்த எனது இருச்சக்கர வாகனத்தை காணவில்லை. எங்கு தேடியும் கிடைக்கவில்லை. இந்த திருட்டு சம்பவம் தொடர்பாக 15.11.2018 ம் தேதியன்று மனனார்குடி நகர காவல் நிலையம் சென்று புகார அளித்தேன்.

2. நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்ததுதான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். **(மேற்படி புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. எனக்கு 01.12.2018 ம் தேதி எனது இருச்சக்கர வாகனம் கிடைத்து விட்டதாக எனக்கு தகவல் சொன்னார்கள். நீதிமன்றத்தில் மனு செய்து என்னுடைய வாகனத்தை பெற்றுக்கொண்டேன். நீதிமன்றத்தில் என்னிடம காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள வாகனம் என்னுடையது தான். **புகைப்படத்தில்**

**உள்ள எண்ணிக்கை - 5 அசா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னுடைய இருச்சக்கர வாகனத்தை திருடியது மருதுபாண்டியன் நகரை சேர்ந்த ராகுல்பாண்டியன் மற்றும் 6ம் நம்பர் வாய்காலை சேர்ந்த பரணிதரன் என்பதை பின்னர் தெரிந்து கொண்டேன். சம்பவம் தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எனது சொந்த ஊர் மேலநத்தம். நான் கடந்த 10 வருடங்களாக மன்னார்குடியில் உளள முல்லைநகரில் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். முல்லை நகரில் பல வீடுகளில் கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். சாதாரணமாக ஒரு பொருள் திருடி போய் விடடால் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவேண்டும் என்று சொனனால் சரிதான். இந்த வழக்கில் 10.11.2018 ல் என்னுடைய இருச்சக்கர வாகனம் காணமல் போனதாக குறிப்பிட்ட நிலையில் காவல் நிலையத்தில் 15.11.2018 ம் தேதியன்று புகார் கொடுத்தற்கான சிறப்பு காரணம் ஏதேனும் இருக்கிறதா என்றால் அக்கம் பக்கதில் தேடி பார்த்து விட்டு பின்பு புகார் கொடுத்தேன். நான் சொல்வது போல் எனது இருச்சக்கர வாகனம் நான் குறிப்பிட்ட தேதியில காணமல போகவில்லை என்றும், அதன்காரணமாக தான் புகாரினை அளித்தேன் என்றால சரியல்ல. முதல் விசாரணையில் சொன்ன நபர்களின் பெயர்களை போலீசார் எனக்கு சொல்லிதான் தெரியும் என்றால் சரிதான். எனது Golden apartment ல் சிசிடிவி கேமரா உள்ளதா என்றால் இல்லை. எனது apartment சிசிடிவி கேமரா உள்ளது வழக்கிற்காக தற்சமயம் நா்ன பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றல் சரியல்ல. காவல் நிலையத்தில் புகார் கொடுத்தபிறகு நேரடியாக நீதிமனற்த்திற்கு வந்து எனது வாகனத்தை பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். வழக்கினுடைய எதிரியை இதற்கு முன்பு நான் பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. வழக்கிற்கும், எதிரிகளுக்கும் எந்தவித தொடர்பு இல்லை என்றால் சரியல்ல.

Sd/---J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.